PERMANENT REFERENCE

Problems and Solutions of Implementing the New Educational Reforms.

An Analysis of the Batticaloa Education Zone

371.0072
SAS
PR

LIBRARY
25 JUL 2003
Eastern University, Sri Lanka.

MISS. SASIKALADEVI SIVASUBRAMANIAM
EU/ES/91/COM/45

Dept of Economics
Eastern University,
Sri Lanka.
03 MAR 2003
Faculty of Commerce &
Management.

FCM563
Project Report
Library - EUSL

Department of Faculty of Commerce and Management
Eastern University
Sri Lanka.
2002

பொருளடக்கம்

	பக்க எண்
ஆய்வின் சுருக்கம்	i
நன்றியுரை	ii
அத்தியாயம் 1 அறிமுகம்	1 - 6
அத்தியாயம் 2 நூலாய்வு	7 - 20
அத்தியாயம் 3 ஆய்வுப்பின்னனியும் இன்றைய கல்வி நலையும்	21 - 48
அத்தியாயம் 4 தரவு பிரதிநிதித்துவமும் பகுப்பாய்வும்	49 - 63
அத்தியாயம் 5 புதிய கல்விச் சீர்திருத்தத்தினை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும்	64 - 70
பின்னிணைப்பு	
வினாக்கொத்து	iii-viii
உசாத்துணை நூல்கள்	ix

ஆய்வின் சுருக்கம்

இவ்வாய்வானது புதிய கல்விச்சீர்திருத்தத்தினை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் பிரச்சினைகளை இனம்காண்பதுடன்அவற்றிற்கு எவ்வாறு தீர்வு காண்பது என்ற விடயங்களைக் கண்டுகொள்வதற்தேற்ப அத்தியாயங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதன்படி அறிமுகம், நூலாய்வு, ஆய்வுப் பின்னணியும் இன்றை கல்வி நிலையும், தரவு பிரதிநிதித்துவமும் பகுப்பாய்வும், பிரச்சினைகளும் தீர்வுகளும் என ஐந்து அத்தியாயங்களைக் கொண்டு காணப்படுகின்றது.

முதலாவது அத்தியாயத்தில் ஆய்வுபற்றிய அறிமுகத்தினையும் ஆய்வு செய்யக் காரணமாக இருந்த பிரச்சினைகள், அதற்காக எழுப்பப்பட்ட வினாக்கள், ஆய்வானது அடைய வேண்டிய நோக்கம், அதற்கேற்ப உருவாக்கப்பட்ட எண்ணக்கருக்கள், ஆய்வு செய்யும் முறை எடுகோள்கள், வரையறைகள் என்பன விபரிக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது அத்தியாயம் நூலாய்வு. ஏற்கனவே பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் காணப்பட்ட கல்வி பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. இவ் அத்தியாயம் சுதந்திரத்தின் முன் இலங்கையில் கல்வி, சுதந்திரத்தின் பின் இலங்கையில் கல்வி, புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கான தேவை, புதிய கல்விச் சீர்திருத்தத்தின் நோக்கங்கள், பாடசாலை மட்டக்கணிப்பீடு, ஆங்கிலக் கல்வி, பாடசாலைச் சீர்திருத்தம், உயர் கல்வி பல்கலைக்கழக சீர்திருத்தம் எனப் பிரிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது அத்தியாயம் ஆய்வுப் பின்னணியும் இன்றைய கல்வியும் என்பது பற்றி ஆராய்வதாக அமைந்துள்ளது. இது அமைவிடம், இயற்கை அமைப்பு, காலநிலை, நிர்வாக அமைப்பு, சமூக அமைப்பு, சுகாதாரம் மற்றும் பொருளாதார நிலை, கைத்தொழில் நிறுவனங்கள் என்பவற்றைப் பற்றியும், இன்றைய கல்வி நிலை பற்றியும் ஆராய்வதாக உள்ளது.

நான்காம் அத்தயாயம் புதிய கல்விச் சீர்திருத்தத்தினை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்காக சம்பந்தப்பட்டவர்களிடம் வினாக்கொத்து மூலம் தகவல்கள் திரட்டப்பட்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இது தரவு பிரதிநிதித்துவமும் பகுப்பாய்வும் என்ற தலைப்பின் கீழ் இடம்பெற்றுள்ளது.

இறுதி அத்தியாயமானது பிரச்சினைகளும் தீர்வுகளும் என்ற தலைப்பின் கீழ் புதிய கல்விச் சீர்திருத்தத்தினை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் பிரச்சினைகளையும் அவற்றிற்கான தீர்வுகளையும் எடுத்து விளக்குவதாகவும் முடிவுரையையும் கொண்டு அமைந்துள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக வேறு பல ஆய்வினை மேற்கொள்பவர்களுக்கு இவ்வாய்வானது பயன் தரும் வகையில் அமையுமானால் அது இவ்வாய்வின் வெற்றியாக அமையும் என எண்ணுகிறேன்.